ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 4 | ஜனவரி 1999 | கானம் : 6

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 4 ஜனவரி 1999 கானம் : 6

## விஷய ஸூசிகை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர்-38 | 4 |
| 3. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 19 | 6 |
| 4. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 7 |
| 5. | வேத கதைகள்-20 | 9 |
| 6. | ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 10 | 11 |
| 7. | குருவைப் பற்றி சில சிந்தனைத் துளிகள் | 15 |
| 8. | எந்தரோ மஹானுபாவுலு - 8 | 16 |
| 9. | ஸ்ரீமத் ராமாயணத்தில் தர்மம் - தொடர்ச்சி | 23 |
| 10. | பாலகர்களுக்கு ஒரு கதை - 14 | 26 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 41 | 30 |
| 12. | செய்திகள் | 31 |
| 13. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |




சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ மஹாபெரியவாள் ஆராதனை அன்று
க்ருத்திகா மண்டலத்தை ஒட்டி வேத பாராயணம் நடைபெற்றது.
அன்று ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கனபாடிகளுக்கு "அத்யாபக ரத்னம்" என்ற விருது அளிக்கப்பட்டது.
Photos by : Sri R. Kalyanakrishnan

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

(ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சிதலிங்கம் மெட்டு) தாளம் : ஆதி

1. *ருக்மிணீ ராதா பூஜித துளஸி ।*
*ப்ருந்தாவன ஸஞ்சாரிணி துளஸி ।*
*ப்ரிய ஜனபாலினி போஷிணி துளஸி ।*
*த்வாம் ப்ரணமாமி ஹரிப்ரிய துளஸி ॥*

2. *மஞ்ஜுள பாஷிணி ஸுமதுர துளஸி ।*
*ஸஞ்சித பாப விநாஶிநி துளஸி ।*
*மானஸ பூஜா தோஷிணி துளஸி ।*
*த்வாம் ப்ரணமாமி ஹரிப்ரிய துளஸி ॥*

3. *ப்ரிய ஹரிநாம ஸங்கீர்த்தன துளஸி ।*
*ஹரி சரணார்பித மார்தவ துளஸி ।*
*வ்ரணருண ஸங்கட வாரிணி துளஸி ।*
*த்வாம் ப்ரணமாமி ஹரிப்ரிய துளஸி ॥*

4. *குங்கும சந்தன லேபித துளஸி ।*
*மங்கள பூஷண பூஷித துளஸி ।*
*பங்கஜ லோசன காமினி துளஸி ।*
*த்வாம் ப்ரணமாமி ஹரிப்ரிய துளஸி ॥*

5. *முனிகண மண்டல பூஜித துளஸி ।*
*ஸன்மன மங்கள காரிணி துளஸி ।*
*ஸ்ரீ முரளீதர ஜீவன துளஸி ।*
*த்வாம் ப்ரணமாமி ஹரிப்ரிய துளஸி ॥*

## 38

ஸமீபத்தில் ஒரு பக்தர், ஸ்வாமிகளை தர்சனம் செய்ய வந்தார். அவர், கும்பகோணம் அருகாமையில் உள்ள திருமங்கலகுடி என்ற கிராமத்தில், வங்கி உத்தியோகத்தில் பணிபுரிந்து வந்தார். அவ்வமயம், அவ்வூரில் கோவில் கொண்டுள்ள மங்களாம்பிகா என்ற தெய்வத்திடம் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார். தனக்கு கல்யாண விஷயமாக ஏதாவது வரன் வந்தால் அந்த அம்மன் ஸந்நதியில் திருவுளச்சீட்டு போட்டுப் பார்த்து, அம்மன் உத்தரவு கொடுத்தால் மட்டும் திருமணம் செய்து கொள்வது என்ற முடிவிற்கு வந்தார். அதன்படி ஒவ்வொரு ஸமயமும் விவாஹத்திற்கு வரன் வரும்பொழுதும், அம்மன் ஸந்நதிக்குச் சென்று திருவுளச்சீட்டு போட்டுப் பார்க்க ஒரு முறை கூட அவருக்கு உத்தரவு ஆகவில்லை. ஆகவே அவருடைய திருமணம் வெகுநாட்களாக தடைபட்டது.

ஸமீபத்தில், ஒரு வரன் எல்லாவிதத்திலும் பொருந்தி வந்தது. அவருடைய உறவினர்கள் பலரும் மிகவும் வற்புறுத்த, அவர் திருவுளச் சீட்டு போட்டுப் பார்க்காமலேயே முடிவு எடுத்துவிடலாமா என்று குழம்பிய சூழ்நிலையில் நம் ஸ்வாமிகளை தர்சனம் செய்ய வந்தார். ஸ்வாமிகளும், நீங்கள் செய்துகொண்ட ப்ரதிக்ஞையை மீறவேண்டாம். நீங்கள் இம்முறை சென்று திருவுளச்சீட்டு போட்டுப் பாருங்கள். தங்களுக்கு ஸாதகமாக வரும் என்று அனுக்கிரஹம் செய்தார். உடனே, அவர் திருமங்கலகுடி சென்று திருவுளச் சீட்டு போட்டுப் பார்க்க இந்த முறை அவருக்கு ஸாதகமாகவே வந்தது. விவாஹமும் நல்லபடியாக நடந்தேறியது.

ஸமீபகாலமாக, மதுரபுரி ஆஸ்ரமத்தில் கட்டிட வேலை நடந்து வருகின்றது. மேலே தளவரிசை போடுவதாக தீர்மானித்திருந்த ஸமயத்தில் மிகவும் நல்ல மழை. எனினும் ஸ்வாமிகள் கூறியபடி ஒரு நாள் தீர்மானித்து தளவரிசை போட ஏற்பாடு செய்யப்பட்டது. காலையிலிருந்து மழை உடனே வருவதுபோல் மேகங்கள் இருண்டு கொண்டுவரும். அந்த ஸமயம் அனைவருக்கும் ஒரு கலக்கத்தைக் கொடுக்கும், பிறகு, மழை வராமல் மேகங்கள் நகர்ந்து விடும். இதுபோல் அன்று பலமுறை நடைபெற்றது.

ஒரு பக்தர் "பகவான் ஏன் இப்படி மழை வந்துவிடுமோ என்பதுபோல் பயத்தைக் கொடுத்து பிறகு மழை வராமலும் அனுக்ரஹித்து விடுகின்றானே" என்று சொன்னார். அதற்கு ஸ்ரீ ஸ்வாமிகள், விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் பயக்ருத், பயநாசன: என்ற நாமங்கள் அடுத்தடுத்து பகவானுக்கு வருகின்றது. அதன் அர்த்தமாவது பயத்தைக் கொடுத்து பயத்தை போக்குபவன் என்று அர்த்தம். இதெல்லாம் பகவானுடைய லீலை என்று கூறி அருளினார்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

மக்கள் தேசத்தினால், மொழி, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் இவைகளினால் பலவிதங்களில் மாறுபடுகின்றனர். ஆனால் எந்த தேசத்திலிருக்கும் நாயும் எப்படி ஒரே மாதிரியாகத்தான் குரைக்கின்றதோ, அதுபோல் மக்கள் எந்த தேசத்தில் வாஸம் செய்தாலும் அவர்களுடைய போட்டி, பொறாமை, கோபம், அஹங்காரம் இவைகள் வித்யாஸப்படுவதில்லை.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

---

அறிவிப்பு :

1. இதுவரை மதுரமுரளியில் வெளிவந்த ஸ்ரீ ஸ்வாமிகளின் கேள்வி பதில்கள் "ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளுரைகள்" என்ற தனி புத்தகமாக வெளி வந்துள்ளது.

   விலை ரூ. 20/-. சென்னை 'ப்ரேமிகபவன'த்தில் கிடைக்கும்.

2. website : visit

   http://members.tripod.com/~madhuramurali to know more about mission activities and satsang events

   The English Spiritual Magazine "Madhura Murali" is also available on Web.

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும் விளக்கங்களும் - 18

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ A. ஸுந்தரேஸ ஶர்மா வாஜபேயயாஜீ

## உத்ராடம்

இது விச்வேதேவர்களை தேவதையாகக் கொண்ட உயர்ந்த நக்ஷத்ரம். நீண்ட கட்டிலின் மற்ற இரண்டு கால்களின் ஆதாரத்தில் அமைவதாகக் கூறியுள்ளனர். உத்ரம், உத்ராடம், உத்திரட்டாதி ஆகிய மூன்று நக்ஷத்ரங்களும் எல்லா சுப கார்யங்களுக்கும் மிக உயர்வாக சொல்லியுள்ளார்கள். இந்த விச்வேதேவர்களுக்கு, ஐஶ்வர்யம், ஆரோக்யம், புகழ் முதலிய பலன்களை தரவல்ல சக்தி உள்ளது. இந்த நக்ஷத்ர ரூபத்தை புரட்டாசி மீ 25-ந் தேதி முதல் ஐப்பசி மீ 6-ந் தேதி முடிய நக்ஷத்ரோதய காலத்தில் ஆகாயத்தில் காணலாம் என வான ஶாஸ்த்ரக்ஞர்கள் கூறுகிறார்கள். உத்ராட நக்ஷத்ரம் இரண்டு ராசிகளைக் கொண்டது. தனுஸ்-மகர ராசிகளைச் சேர்ந்தது. இந்த நக்ஷத்ரத்தில் தனுஸ் ராசியில் ஜனித்தவர்கள் நல்ல வார்த்தைக்கு கட்டுப்பட்டவர்களாகவும், பலாத்காரத்துக்குக் கட்டுப்படாதவர்களாகவும் இருப்பார்கள். மகர ராசியானால் சற்று முரட்டுத்தனம்கொண்டும், சற்று சுறுசுறுப்பு குறைவுடனும், தர்மத்தில் சற்று பிடிப்பு இல்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

பொதுவாக, உத்ராட நக்ஷத்ரத்தில் பிறந்தவர்கள் வினயம் கொண்டவர்களாகவும், நிறைய ஸ்நேஹிதர்கள் உடையவர்களாகவும், செய்நன்றி மறக்காதவர்களாகவும் இருப்பார்கள். ஒரு விஷயத்தை ஒரு முறை சொன்ன உடனேயே மனதில் வாங்கிகொள்ளும் சக்தி படைத்தவர்களாக இருப்பார்கள். அலையும் ஸ்வபாவம் கொண்டவர்கள். ஸ்த்ரீகளிடம் பழகுவதில் விருப்பம் கொண்டிருப்பர். கண்ணழகு படைத்தவர்களாக இருப்பார்கள். தன் மனைவி, மக்களிடம் மிகவும் ப்ரீதியுடன் நடந்து கொள்வார்கள். எதிரிகள் இவர்களை சற்று சுலபமாக தன்வயப்படுத்திவிடும் வாய்ப்புண்டு. தயவு என்பது இவர்களிடம் கேள்விக்குறி. சோம்பல் என்பது இவர்களுடன் பிறந்த ஒரு தோஷம். இவர்கள் இதை தவிர்க்க முற்பட்டால் வாழ்க்கையில் மிகவும் உயர்ந்து விடுவார்கள்.

உத்ராடத்தில் பிறந்தவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டால் நல்ல முன்னேற்றத்தை அடைவார்கள். ஒரு கார்யத்தை இவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டுவிட்டால் மிகச் செவ்வனே செய்துமுடிப்பார்கள் என்பது இவர்களின் சிறப்பு. ■

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : தாங்கள் நாமகீர்த்தனம் செய்யும்பொழுது நாம அபராதங்களைத் தவிர்த்து கீர்த்தனம் செய்யவேண்டும் என்று ஒரு ஸமயத்தில் கூறி உள்ளீர்கள். நாம அபராதங்களாவன யாவை?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : நாம அபராதங்களாவன

1. ஸாதுக்களை நிந்தித்தல்
2. துஷ்டனிடத்தில் நாம மஹிமையைக் கூறல்
3. சிவ, விஷ்ணு தேவதைகளை வேறாக அறிதல்
4. வேதத்தில் அவநம்பிக்கை
5. ஶாஸ்த்ரத்தில் அஶ்ரத்தை
6. குரு வாக்யத்தில் விஶ்வாஸமின்மை
7. நாம விதானத்தில் அர்த்தவாத புத்தி
8. நாம பலம் இருக்கிறது என்ற துணிவால் நிஷித்த கர்மானுஷ்டானம்
9. அவ்வாறே விஹித கர்மபரித்யாகம்
10. நாம கீர்த்தனத்தை இதர தர்மங்களுடன் ஒப்பிடல்

*கேள்வி : மத்வாச்சாரியார் ஒரு ஸமயம் யாகசாலைக்கு அழைத்து செல்லப்படும் பசுக்களை கட்டிக்கொண்டு அழுதார் என்று ஒரு புஸ்தகத்தில் படித்தேன். வேத ப்ரமாணத்தின்படி, அந்தப் பசுக்களுக்கு ஸ்வர்க்கம் நிச்சயமாயிருக்க, வேதத்தையே ப்ரமாணமாகக் கொண்டுள்ள மத்வாச்சாரியார் ஏன் அழவேண்டும்?*

பதில் : ஒரு சிஷ்யன், தன் குரு ஸித்தியானவுடன் அழுகின்றான். அவனுக்கு தன்னுடைய உத்தம குருவானவர், நிச்சயம் வைகுண்டம்தான் சென்றிருப்பார் என்று தெரியாதா? அப்படி இருக்கையில் ஏன் அழவேண்டும் என்று யாராவது கேட்பார்களா? விவேகம் வேறு. ப்ரேமை வேறு. தஹிக்கக்கூடிய சூரிய க்ரஹணங்களை எப்படி மிருதுவான மேகங்கள் மறைத்து விடுகின்றனவோ, அதுபோல் உயர்ந்த விவேகத்தையும், ஞானத்தையும்கூட ப்ரேமை மறைத்து விடும்.

***கேள்வி : நாம் மஹாத்மாக்களை தரிசனம் செய்யும்போது அவர்கள் யத்ருச்சையாக பேசும் பேச்சுக்களுக்கும் அவர்கள் செய்யும் ஸங்கேதங்களுக்கும் ஏதோ ஒரு உட்பொருள் இருக்குமென்றும் அதை நாம் தகுந்தவர்களிடம் கூறி உட்பொருளைப் புரிந்து கொள்ளவேண்டும் என்று கூறுகின்றனரே. இது சரியா?***

பதில் : மஹாத்மாக்களின் செயல்களுக்கும், ஸம்பாஷணைகளுக்கும் உரிய காரணத்தை அவர்களைத் தவிர வேறு யாராலும் ஒருக்காலும் புரிந்து கொள்ளமுடியாது. அவைகளுக்கு விளக்கம் அளிப்பது என்பதெல்லாம் அவரவர்களின் கற்பனைகளே. ஒருக்கால், பிற்காலத்தில் நமக்கு நடக்கும் ஸம்பவங்களுக்கும், இவைகளுக்கும் ஸம்பந்தம் இருக்குமானால் அவைகள் நடக்கும்பொழுதுதான் நம்மால் புரிந்து கொள்ளமுடியுமே தவிர, அதற்கு முன்பு ஒன்றும் புரியாது. ஆகவே, இது மாதிரியான விஷயங்களில் நாம் மனதை செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. மஹாத்மாக்களின் செயல்களுக்கும், பேச்சுக்களுக்கும் விளக்கம் அளிப்பது என்பது குருடர்கள் யானையைப் பார்த்த கதையை ஒத்ததே ஆகும்.

***கேள்வி : என்னுடைய நண்பன் ஒருவன் தனக்கு பலவிதமான ஆன்மீக அனுபவங்கள் ஏற்பட்டுள்ளதாகக் கூறி அவைகளை மிகவும் ஸ்வாரஸ்யமாக விவரிக்கின்றான். ஆனால், அவனுடைய செய்கைகளையும், நடவடிக்கைகளையும் பார்க்கும்பொழுது, என்னால் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால், அதே ஸமயம், அவன் பொய் சொல்வதாகவும் தோன்றவில்லை. அவன் அவைகளை முழுவதுமாக நம்புகின்றான் என்றே எனக்கு தோன்றுகின்றது.***

பதில் : மிகவும் கடினமான ஹ்ருதயத்தில் பக்தி தோன்றுவதில்லை. மிருதுவான ஹ்ருதயத்தில்தான் பக்தி உதிக்கின்றது. மிருதுவான ஹ்ருதயம் என்பது வேறு. பலஹீனமான ஹ்ருதயம் என்பது வேறு. சில சமயம், ''இது மாதிரியான அறிகுறிகள் இருந்தால், அது இன்ன நோயின் ஆரம்பமாக இருக்கும்'' என்ற விஷயங்களை படிக்கவோ அல்லது கேட்கவோ நேர்ந்திடும் சிலர், தனக்கும் அதுபோல் அறிகுறிகள் இருப்பதாக நினைத்து கவலைப்படுவார்கள். அதுபோல், மஹாத்மாக்களின் அனுபவங்களை படிக்கவோ, கேட்கவோ நேர்ந்திடும் சிலர், தனக்கும் அதுபோல் எல்லாம் அனுபவங்கள் ஏற்படுவதாக கற்பனை செய்துகொண்டு அதை உண்மை என்றும் நம்புவர். அதன் விளைவாக நீங்கள் சொல்வது இருக்கலாம்.

# வேத கதைகள் - 20

- தர்மக்ஞர், வாங்கமுக ஸார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச ஸாஸ்திரிகள்

## அக்னிஹோத்ரத்தின் தோற்றம்

முன்பு ஒரு ஸமயம், ப்ரஜாபதியானவர், அறிவற்ற மலை, நகரம் முதலியவற்றை உண்டுபண்ணி ஜீவசக்தியோடுகூடின அறிவுள்ளதான வஸ்து ஸமூகமானது அக்னியில் உண்டாகட்டும் என்று விரும்பி அதற்கு ஸாதனமான ஹோமத்தைச் செய்தார். அந்த ஹோமத்தினால் சேதனமான அக்னி, வாயு, ஆதித்யர்கள் உண்டானார்கள். அந்த அக்னி முதலானவர்களும் ஒருவருக்கொருவர் நன்கு ஆலோசனை செய்து "ப்ரஜாபதியின் ஹோமத்திலிருந்து நாம் எப்படி தோன்றினோமோ அதைப்போல் நம்மிடமிருந்தும் அறிவுள்ள பொருள்கள் உண்டாகட்டும்" என்று ஆலோசித்து ஹோமம் செய்தனர். அதில் அக்னியானவர் (ப்ராணேப்ய: ஸ்வாஹா) என்று ப்ராணங்களின் பொருட்டு ஹோமம் செய்தார். வாயு, தனுவின் பொருட்டும் (தனு என்றால் உடல் என்று பொருள்), ஆதித்யன் கண்ணின் பொருட்டும் (சக்ஷுஷே ஸ்வாஹா) என்றும் ஹோமம் செய்தனர்.

இவ்விதம் மூவருடைய ஹோமத்திற்கு பிறகு ஒரு பசு உண்டாயிற்று. மூவருடைய ஹோமத்திலிருந்து எந்த பசு உண்டாயிற்றோ அதன் பாலிற்காக மூவருக்குள் கலகம் ஏற்பட்டது. என்னுடைய ஹோமத்திலிருந்துதான் இந்த பசு ஏற்பட்டது என்று அக்னி, வாயு, ஆதித்யன் மூவரும் கலகம் செய்தனர். பிறகு மூவரும் உண்மையை நிர்ணயிப்பதற்காக ப்ரஜாபதியை நோக்கி வந்தனர். அப்படி வருங்காலத்தில், அப்படி வருங்காலத்தில், "நம் இருவரில் யாருக்கு வெற்றி ஏற்பட்டாலும் நம் இருவருக்கும் பொதுவாகவே இந்தப் பசு இருக்கட்டும்" என்று அக்னி, ஆதித்யர் இருவரும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர்.

இந்தப் பசுவின் பால் யாரைச் சேர்ந்தது என்று மூவரும் ப்ரஜாபதியைக் கேட்டனர். ப்ரஜாபதியானவர், "யார் எந்த தேவதையை உத்தேஸித்து ஹோமம் செய்தீர்கள்" என்று கேட்டார். அப்பொழுது அக்னி, ப்ராணங்களின் பொருட்டு நான் ஹோமம் செய்தேன் என்றும், வாயு,

ஸரீரத்தின் பொருட்டு என்றும், ஆதித்யன், கண்ணின் பொருட்டு என்றும் கூறினார்கள்.

"உடல், கண் இவைகள் ப்ராணனுக்கு உட்பட்டவைகள். ப்ராணன் இருந்தால்தான் இவைகள் வேலை செய்யும். ப்ராணன் இல்லாவிடில் இவைகள் வேலை செய்யா. இந்த காரணத்தால், ப்ராணன் பொருட்டு அக்னி செய்த ஹோமத்திலிருந்துதான் இந்தப் பசு ஏற்பட்டது" என்று ப்ரஜாபதி தீர்ப்பு அளித்தார்.

அக்னியால் செய்யப்பட்ட ஹோமத்திலிருந்து இந்தப் பசு உண்டானதால் இந்த பசுவிற்கே அக்னிஹோத்ரம் என்று பெயர் ஏற்பட்டது. இதை அறிந்தவனுக்கு ப்ராணாபானங்கள் பூர்ணமாக இருக்கும். பகவானால் நமக்கு ஏற்பட்ட பூர்ணஆயுஸுக்கு நடுவில் அபம்ருத்யுவினால் மரணம் ஏற்படாது. இந்த தீர்ப்பினால் அக்னி, ஆதித்யன் இவர்களின் உடன்படிக்கையின்படி அக்னி வெற்றி பெற்றது. அக்னி, ஆதித்யன் இவர்களுக்கு பொதுவாகவே அந்தப் பசு ஆயிற்று. வாயு மட்டும் பாகமற்றவராக இருந்தார்.

உடன் வாயுவானவர், இந்த பசுவில் எனக்கும் பாகம் கொடுங்கள் என்று அக்னி, ஸூர்யர்களை வேண்டினார். அக்னிஹோத்ர ஹோமம் செய்யும்பொழுது காருஹபத்யம் என்ற இடத்திலிருந்து ஆஹவனீயத்தை நோக்கி ஹோமம் செய்வதற்காக பாலை எடுத்துவரும்பொழுது 'வாதாயத்வா' என்று ஒரு மந்திரம் சொல்ல வேண்டும். 'வாதாய' என்றால் வாயுவின் பொருட்டு என்று பொருள். இதனால் வாயுவிற்கும் இந்த பாலில் பாகம் ஏற்பட்டது. இந்த வேத கதையால் அக்னிஹோத்ரத்தின் தோற்றமும் அக்னி ஹோத்ரத்தின் பெருமையும் விளக்கப்பட்டு இருக்கிறது. ■

**மஹாபாரதத்திலிருந்து** -

* விளையாட்டுக்காகவும், பெண்களிடத்திலும், உயிருக்கு அபாயம் ஏற்படும் காலத்திலும், சொத்தெல்லாம் பறிபோகும் காலத்திலும், விவாஹ காலத்திலும் சொல்லப்படுகின்ற பொய்கள் பாபத்தை வருவிக்கின்ற பொய்களாகாது.
* ஒருவரை தூஷித்தவன் ஏதாவது புண்ணியம் செய்திருந்தால் அந்த புண்ணியமானது தூஷிக்கப்பட்டவனை சென்றடையும்.

# ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 10

ப்ரஹ்மஸ்ரீ பாலக்ருஷ்ண ஶாஸ்த்ரிகள்

## கோபீ ப்ரேமை

*நாரதஸ்து ததர்பிதாகிலாசாரதா தத்விஸ்மரணே*
*பரமவ்யாகுலதேதி ॥ 19 ॥*

"எல்லா செயல்களையும் பகவானுக்கே ஸமர்ப்பித்து, பகவானின் அகண்ட ஸ்மரணையில் இருக்கும் நிலையில், சிறிது நேரம் பகவானை மறக்க நேர்ந்தாலும் மீளாத்துயர் கொள்வதே பக்தி" என்கிறார் ப்ரஹ்ம குமாரரான நாரதர். நாரதரின் இந்த விவரணம் கர்கர், வ்யாஸர், ஸாண்டில்யர் முதலியவர்களின் கூற்றுக்கு மாறுபட்டதாக ஆகாது. அவர்கள் கூறிய அனைத்தையும் ஏற்று, அவைகளில் ஊடுருவி இருக்கும் நிலையையே இங்கு நாரதர் எடுத்துச் சொல்கிறார். எனவே நாரதரின் அபிப்ராயம், கர்கர் முதலியவர் கூறிய நிலையை ஒட்டியே உள்ளது. கதை முதலியவற்றிலும் பகவானிடம் அகண்டமாய் சித்தவ்ருத்தி நிலைத்து இருப்பதால்தானே அவைகள் பக்தியாக ஆகின்றன. எனவே பகவத்பரமான அவிச்சின்னமான சித்தவ்ருத்தியே பக்தி என்பதை இந்த ஸூத்ரத்தில் குறிப்பிடுகிறார்.

ஸரீரத்தாலோ, வாக்காலோ, மனதாலோ, புலன்களாலோ செய்யப்படும் அனைத்து செயல்களும் "நாராயணாயேதி ஸமர்ப்பயாமி" என்று பகவானுக்கே ஸமர்ப்பிக்கவேண்டும் என்பது பெரியோர்கள் வகுத்துக் கொடுத்த வழி. தனக்காக செய்யும்பொழுது, அல்ப பலன்களை கொடுத்து பந்தத்திற்கு காரணமாய் இருக்கும் கர்மாக்கள், பகவானுக்கு ஸமர்ப்பணம் செய்யும்பொழுது, அனந்த பலனைக் கொடுத்து முக்திக்கு ஹேதுவாய் ஆகின்றன. லௌகீக கார்யமானாலும் பகவத் அர்ப்பணமாய் செய்யும்பொழுது பகவதாராதனையாகவும் ஆகின்றது.

*யத்கரோஷி யதஶ்னாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் ।*
*யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்பணம் ॥*

**- ஸ்ரீ மத்பகவத் கீதை**

"குந்தியின் செல்வா ! நீ செய்யும் செயல்கள், அன்னமுண்பது, ஹோமம், தானம், தவம் அனைத்தையும் எனக்கு அர்ப்பணம் செய்வாயாக" என்கிறார் கீதாச்சார்யன்.

அனைத்தையும் பகவானுக்கே அர்ப்பித்து, எங்கும், எதிலும், எப்பொழுதும் பகவத் ஸ்மரணையிலேயே இருந்துகொண்டு, வாழ்க்கையில் எது நேர்ந்தாலும் பகவானின் கருணையையே நினைத்திருக்கும் பக்தன் ஏதாவது காரணத்தால், சிறிது நேரம் பகவானை மறக்க நேர்ந்தாலும் கூட மிகவும் துடித்துப் போய்விடுவான். அவனால் ஒரு க்ஷணம்கூட பகவானை மறந்திருக்க இயலாது. அப்படி மறக்க நேரிட்டால் அதையே வாழ்க்கையின் பெரிய ஹானியாக, விபத்தாக நினைப்பான்.

*'விபதோ நைவ விபத: ஸம்பதோ நைவ ஸம்பத: ।*
*விபத்விஸ்மரணம் விஷ்ணோ: ஸம்பந்நாராயணஸ்ம்ருதி: ॥*

''விபத்துகளெல்லாம் விபத்து இல்லை. ஸம்பத்து எல்லாம் (செல்வம் எல்லாம்) ஸம்பத்து இல்லை. பகவானை மறப்பதே பெரிய விபத்து. பகவத் ஸ்மரணையே பெரிய ஸம்பத்து'', என்பது வ்யாஸரின் வாக்கு. எனவே பகவானை மறக்க நேரிடும் நேரத்தில் பெரிய விபத்தில் மாட்டிக்கொண்டவனாய் திண்டாடுகிறான் பக்தன். உள்ளத்தாலோ, உடலாலோ பகவானைப் பிரிய நேர்ந்தால் இமைப்பொழுதும் யுகமாக ஆகிறது அவனுக்கு.

*யுகாயிதம் நிமேஷேண சக்ஷுஷா ப்ராவ்ருஷாயிதம் ।*
*ஶூன்யாயிதம் ஜகத் ஸர்வம் கோவிந்தவிரஹேண மே ॥*

**- ஸ்ரீ க்ருஷ்ண சைதன்யர்**

''கோவிந்தனுடைய பிரிவால் இமைக்கும் நேரம்கூட யுகமாக நீள்கிறது. கண்களோ வர்ஷாகால ஆகாசமாய் ஆயின. உலகம் முழுவதும் ஶூன்யமாய் ஆயிற்று'' என்கிறார் க்ருஷ்ண விரஹத்தில் துடிக்கும் ப்ரேமாவதாரமான ஸ்ரீ க்ருஷ்ண சைதன்யர்.

உள்ளத்தாலோ, உடலாலோ பகவானை விட்டு விலக காரணமாய் அமையும் எண்ணங்களோ, மக்கள் சேர்த்தியோ வேண்டவே வேண்டாமென பகவானிடம் இறைஞ்சுகின்றனர் மெய்யன்பர்கள். எனவே, ''அனைத்து செயல்களையும் பகவானுக்கு ஸமர்ப்பித்து கண நேரம் பகவானை மறக்க நேர்ந்தாலும் கலங்கிப் போவதே பக்தி'' என்கிறார் ஸ்ரீ நாரதர்.

*அஸ்த்யேவமேவம் ॥ 20 ॥*

''இதுவே சரியானது. இதற்கு த்ருஷ்டாந்தமும் உண்டு''. பக்தி ஶாஸ்த்ரங்களையும், பக்தர்களின் நிலையையும் நன்கு ஆராய்ந்து பார்த்தோமேயானால் நாரதரின் கூற்று முற்றிலும் பொருத்தமானது என்பது

புரியும். உண்மையான பக்தனிடத்தில் மேற்சொன்ன இரண்டு லக்ஷணங்களும் பூஷணமாயிருக்கும்.

இவ்வாறு பக்தியின் லக்ஷணத்தை, தனது அபிப்ராயப்படி கூறிய நாரதர், அந்த பக்திக்கு எடுத்துக்காட்டாக கோபிகைகளை குறிப்பிடுகிறார் அடுத்த ஸூத்ரத்தில்.

*''யதா வ்ரஜகோபீகானாம்'' ॥ 21 ॥*

"ஸ்ரீ ப்ருந்தாவன கோபிகைகளின் நிலையைப் போல" என்று. ஸ்ரீ க்ருஷ்ணபக்திக்கு வழிகாட்டியாய் இருப்பவர்கள் கோபிகைகள், அவர்களிடம் மேற்சொன்ன இரண்டு லக்ஷணங்களும் பொருந்தி இருப்பதை அனுபவிக்கிறோம். அவர்களின் பக்தி அலௌகிகமானது. ப்ரேமமயமானது. உலக இன்பங்களில் ஸுகித்திருப்பவர்களுக்கு புரியக்கூடியது அல்ல. ஶுகர், பீஷ்மர், உத்தவர், ப்ரஹ்மா, நாரதர் போன்றவர்களே கோபிகைகளின் மகிமையை அறிவார்கள். கோபிகைகளின் சுத்தமான உள்ளத்தில் எழும்பும் க்ருஷ்ணப்ரேமையின் ஆழம் அவர்களுக்கே தெரியும். மனதில் வேறு எந்த இச்சைக்கும் இடம் கொடாமல் க்ருஷ்ணமயமாகவே இருக்கும் கோபிகைகள் க்ருஷ்ணப்ரேமையாலேயே ஸகல பந்தங்களும் நீங்கப்பெற்றார்கள். வேதங்கள் தேடும் பரமனின் திருவடி அவர்களின் சொந்த சொத்தாக ஆயிற்று.

*ந லக்ஷ்யம் ஸ்வஸுகம் தாஸாம் க்ருஷ்ண ஸௌக்யாய கேவலம் ।*
*தாபி: ஸமர்பிதம் ஸர்வம் மனோவாக்காய சேஷ்டிதம் ॥*

- ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்

"தன் ஸுகம் எதுவும் அவர்களுக்கு லக்ஷ்யம் இல்லை. மனது, வாக்கு, ஸரீரம் அனைத்தையும் ஸ்ரீ க்ருஷ்ணனுக்கே அர்ப்பித்த அவர்களது அனைத்து செயலும் ஸ்ரீ க்ருஷ்ண ஸௌக்யத்துக்காகவே இருந்தது" என்கிறார் எனது குருநாதர், ஸத்குரு ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்.

*தன்மனஸ்காஸ்ததாலாபா தத்விசேஷ்டாஸ்ததாத்மிகா: ।*
*தத்குணானேவ காயந்த்ய: நாத்மாகாராணி ஸஸ்மரு: ॥*

- ஸ்ரீமத் பாகவதம்

என்று அவர்களது நிலையை ராஸலீலையில் வர்ணிக்கிறார் ஸ்ரீ ஶுகர்.

பகவான் ஸ்ரீ க்ருஷ்ணனும் உத்தவனிடம் சொல்லும்பொழுது,

*"தா மன்மனஸ்கா மத்ப்ராணா மதர்தே த்யக்ததைஹிகா:"*

என்கிறார். அவர்களது ப்ரேம பாசத்தில் சிக்குண்ட ப்ரேமிகவரதனும் அவர்களுக்கு பதில் ஏதும் செய்யமுடியாத கடனாளியாகவே தன்னை சொல்கிறான். எனவேதான் ப்ரஹ்மா, உத்தவன் போன்றோர், கோபிகைகளின் பாததூளி தன்மேல் படும்படியான பிறவி தனக்கு வேண்டுமென வேண்டுகின்றனர். ஒரு கணம் கூட கண்ணனை பிரிந்திருக்க முடியாத அவர்களது ஒவ்வொரு செயலிலும் கண்ணன் கூடவே இருந்தான்.

*யா தோஹனேऽவஹனனே மதனோபலேப-*
*ப்ரேங்கேங்கனார்பருதிதோ க்ஷணமார்ஜனாதௌ ।*
*காயந்தி சைனமனுரக்ததியோऽஸ்ருகண்ட்யோ*
*தன்யா வ்ரஜஸ்த்ரிய உருக்ரமசித்தயானா:*

- ஸ்ரீமத் பாகவதம்

"மாடு கறக்கும் ஸமயத்திலும், தான்யங்கள் குத்தும் நேரத்திலும், தயிர் கடையும் பொழுதும், சாணி தெளித்து, பெருக்கி, வீடு மெழுகும் ஸமயத்திலும், அழும் குழந்தையை ஸமாதானப்படுத்தி தொட்டிலிட்டு ஆட்டும்பொழுதும் உள்ளத்தில் கண்ணனிடம் ப்ரேமை பொங்க, கண்களில் கண்ணீர் பெருக, தழுதழுத்த குரலில் அவனை பாடிக்கொண்டே அவனிடத்தில் மனதை நிறுத்திய கோபிகைகளே தன்யர்கள்" என்று மதுரா நகர பெண்மணிகள் வர்ணிக்கின்றனர். இவ்வாறு எல்லா செயல்களையும் க்ருஷ்ணமயமாக்கிய அவர்களால் ஒரு கணமும் பகவானை மறந்திருக்க முடியவில்லை. ராஸத்தின் நடுவில் அவன் மறைந்துவிட *"த்ருடிர்யுகாயதே த்வாமபஶ்யதாம்"*. "உன்னை பார்க்காமல் நொடி நேரம் யுகமாக ஆகிறது" என கதறுகின்றனர். ஸ்ரீ ஶுகரும்,

*"க்ஷணம் யுகஶதமிவ யாஸாம் யேனவினாऽபவத்"*

"ஸ்ரீ க்ருஷ்ணன் இல்லாமல் கோபிகைகளுக்கு கண நேரம் நூறுயுகமாய் ஆயிற்று" என்கிறார். எனவே, எல்லா செயல்களையும் பகவானுக்கே அர்ப்பித்து, கணநேரம் பகவானை பிரிந்தால், கலங்கிப்போகும் நிலைக்கு கோபிகைகள் எடுத்துக்காட்டாய் உள்ளனர்.

(தொடரும்)

# குருவைப் பற்றிய சில சிந்தனைத்துளிகள்

1. தன்னை அண்டியவர்கள், லௌகீக சுகங்களையும், பரமார்த்திகமான லாபத்தையும் அடைவதற்காகத் தன்னை அல்லும் பகலும் எந்த குருவானவர் வருத்திக் கொள்கின்றாரோ, அந்த குருநாதரை நமஸ்கரிக்கின்றேன்.

2. தன்னை அண்டியவர்களுக்கு, அவர்கள் அறியாமலே பல க்ஷேமங்கள் செய்து, அதைத் தானும் மறந்து விடுகின்றாரோ, அந்த குருநாதரை நமஸ்கரிக்கின்றேன்.

3. யார் தன்னுடைய நடை, ஸம்பாஷணை, மந்தஹாஸம், ஸ்பர்ஸம், இவைகளினால் அந்த ப்ரபஞ்சத்தை பவித்ரமாக்குகின்றாரோ அந்த குருநாதரை நமஸ்கரிக்கின்றேன்.

4. யார் தன்னுடைய அனுக்ரஹ விசேஷத்தால் காமதேனு, கற்பக விருக்ஷம் போன்றவைகளையும் கூட வெட்கமடையச் செய்து விடுகின்றாரோ, அந்த குருநாதரை நமஸ்கரிக்கின்றேன்.

5. எத்தனையோ அபராதங்கள் செய்தபோதிலும், தன்னைச் சேர்ந்தவர்களிடத்தில் அதே ப்ரேமையுடனும், வாஞ்சையுடனும் ப்ரேமையை வர்ஷிக்கும் அந்த குருநாதரை நமஸ்கரிக்கின்றேன்.

6. எவர் செய்த க்ருபைக்கு ஈரேழு ஜன்மம் எடுத்து உழைத்தாலும் அது ஈடாகாதோ, அந்த குருநாதரை நமஸ்கரிக்கின்றேன்.

7. அனைத்தையும் அறிந்தும் ஒன்றுமறியாதவர் போலவும், மஹாஶக்தனாக இருந்தும், அஶக்தன் போலவும், பகவானாக இருந்தும், மானுடன் போலவும் நடந்துகொண்டு மாயையால் தன்னுடைய பராக்ரமத்தை எந்த குருநாதர் மறைத்து வைத்துள்ளாரோ அவரை நமஸ்கரிக்கின்றேன்.

8. யாருடைய க்ருபையை நினைத்து ஏகாந்தத்தில் அழுவதைக் காட்டிலும் வேறு ஒன்றும் செய்யமுடியாத தீனனாக இருக்கின்றேனோ அந்த குருநாதரை நமஸ்கரிக்கின்றேன்.

9. இறைவனை நாம் அழைத்தால் அவன் வந்து அருளுவதுண்டு. ஆனால், எந்த குருநாதர் நம்மை எல்லாம் அவர் அழைத்தழைத்து கருணையைப் பொழிகின்றாரோ, அந்த குருநாதரை நமஸ்கரிக்கின்றேன். ■

# எந்தரோ மஹானுபாவுலு - 8

ஸ்ரீவிஜயீந்த்ர ஸ்வாமிகளின் ஜ்யோதிஷ ஶாஸ்த்ர ஞானத்தை விளக்கும் ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்போம். ஸ்ரீ ஸாரங்கபாணியின் சைத்ரோத்ஸவத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆலோசனை நடத்த, ஸ்வாமிகள் முன்பு மடத்து அர்ச்சகர்கள், அதிகாரிகள், பண்டிதர்கள், ப்ரமுகர்கள் ஆகியோர் குழுமியிருந்தனர். அச்சமயம், ''ஜ்யோதிஷ மார்த்தாண்டர்'' என்ற பட்டம்பெற்ற, கேரள தேசத்து ஆஸ்தான பண்டிதரான ப்ரபஞ்சன ஶர்மா, விஜய யாத்திரையாக தஞ்சாவூர் வந்து அங்கும் ஆஸ்தான பண்டிதரானார். ஸ்வாமிகளிடம் வந்து அவர் நமஸ்கரித்து தாம் ஜ்யோதிஷத்தில் அவருடன் போட்டியிட விரும்புவதாகச் சொன்னார். ஸ்வாமிகள் அவரிடம், ''நீங்கள் என்னிடம் ஜ்யோதிஷத்தின் ப்ரஶ்ன விபாகத்தில் பரீக்ஷை நடத்த விரும்புகிறீர்கள் அல்லவா? அதிலேயே வைத்துக்கொள்ளலாம் என்றதும், ஜோதிடர் ''என் மன எண்ணத்தை அப்படியே சொல்லிவிட்டீர்களே'' என்று பதில் கூறினார்.

ஜ்யோதிஷரே போட்டியைச் சொன்னார். ''அன்றோ, மறுநாளோ மடத்தில் நடக்க இருக்கும் முக்கிய நிகழ்ச்சியை முன் கூட்டியே எழுதிக் கொடுத்துவிடவேண்டும். மறுநாள் ஸபையில் அதை சரிபார்க்க வேண்டும்'' என்றார். ஸ்வாமிகளும் ஜோதிடரும் வெவ்வேறு இடங்களில் அமர்ந்து தனித்தனி ஓலைகளில் எழுதி தனிப்பைகளில் போட்டு பிறகு இரண்டையும் ஒரு பெரிய பையில் போட்டு சீல் வைத்து கட்டி நம்பிக்கையான ஒரு ப்ரமுகரிடம் கொடுத்து அதை மறுநாள் மாலை ஸபைக்குக் கொண்டு வருமாறு ஏற்பாடு ஆயிற்று.

மறுநாள் காலையில் தஞ்சை மன்னர் சிவப்பநாயக்கர், அவரது புத்ரர் அச்சுதப்பநாயக்கர், ஸஹோதரர் சின்ன சிவப்பநாயக்கர் ஆகியோர் ஸ்வாமிகளின் தர்சனத்துக்கு வந்தனர். சிவப்பநாயக்கர் ஸ்வாமிகளை வணங்கி, ''மஹாஸ்வாமி! தங்கள் அனுக்ரஹத்தால் ஜனித்த என் புத்ரன் தங்களுக்கு அறவில்லிமங்கலம் என்ற நல்ல கிராமதானம் செய்ய விரும்புவதால் அதற்கான ஸாஸனத்தை பெற்றுக்கொண்டு எங்களை அனுக்ரஹம் செய்ய வேணும்'' எனக் கூறி புஷ்ப தாம்பூலங்களுடன் தாமிர ஸாஸனத்தை வைத்து நமஸ்கரித்தார். மற்ற மன்னர்களும் நமஸ்கரித்தனர்.

ஸ்வாமிகள் அதை ஸ்வீகரித்து, ''நாயக்கர்களே! தர்ம ஸம்ரக்ஷணையை தாங்கள் நன்கு செய்வதால் தேசமும், தேவாலயங்களும் சுபிக்ஷமாக உள்ளன. நீங்களும் ப்ரஜைகளும் நீடூழி வாழ்ந்து தர்மத்தை ரக்ஷிக்க வேண்டும்'' என ஆசீர்வாதித்தார்.

பூஜை முடிந்ததும் மாலையில் ஸபை கூடியது. மன்னர்களுக்கு தமது ஆஸ்தான வித்வான் ஸ்வாமிகளிடம் போட்டியிட வந்திருப்பது பற்றி வருத்தமானாலும் "என்னதான் நடக்கிறது என்று பார்க்கலாம்" என்ற குதூஹலத்துடன் ஸபைக்கு வந்து அமர்ந்தனர். ஓலைப்பை வந்தது.

முத்திரை சரிபார்க்கப்பட்டு முதலில் ஶர்மாவின் ஓலை ஸபையில் வாசிக்கப்பட்டது. அதில் அவர், மறுநாள் காலை மன்னர், மடத்துக்கு பூதானம் வழங்குவார் என எழுதியிருந்தது. அதைக் கேட்டு அனைவரும் ஶர்மாவை கொண்டாடினர். பிறகு ஸ்வாமிகளின் ஓலை வாசிக்கப்பட்டது. அதில் அவர், மறுநாள் பூஜைக்கு, சிவப்பநாயக்கர், அச்சுதப்பநாயக்கர், சின்ன சிவப்பநாயக்கர் ஆகிய மூவரும் அறவல்லிமங்கல கிராமதான ஸாஸனத்துடனும், பூஜா த்ரவியங்களுடனும் வந்து காணிக்கை ஸமர்ப்பிப்பார்கள். மேலும், இந்த ஓலை வாசிக்கும் ஸமயத்தில் ப்ரபஞ்சனஶர்மாவுக்கு அவரது ஊரில் புத்ரோத்ஸவமாகி இருக்கும் என்கிற செய்தியை அவரது நண்பர் ஒருவர் ஸபைக்கு வந்து கூறுவார் என்றும் எழுதப்பட்டிருந்தது.

அந்த ஸமயத்தில் ஒரு ப்ராஹ்மணர் ஸபைக்கு வந்து, ஸ்வாமிகளுக்கும், ஸபைக்கும், ஶர்மாவுக்கும் நமஸ்காரம் செய்து, "ஶர்மாஜி! நான் கும்பகோணம் புறப்படுவதற்கு முதல் நாள், தங்களுக்கு புத்ரன் பிறந்துள்ள செய்தியை தங்கள் வீட்டிலுள்ளவர்கள் சொல்லி அனுப்பினார்கள். இதை உங்களிடம் தெரிவிக்க நான் மிகவும் ஸந்தோஷப்படுகிறேன்" என்றார். ஸபையோர்கள், முதல் செய்தியை விவரமாகவும், இரண்டாவது செய்தியை புதிதாகவும் ஸ்வாமிகள் எழுதி இருப்பதைக் கேட்டு ஆனந்தத்தில் திளைத்தனர். ஶர்மா, ஸ்வாமிகளை நமஸ்கரித்து, அவரது மேதா விலாஸத்தை கொண்டாடினார். ஸ்வாமிகளும் ஶர்மாவை கௌரவித்து அனுப்பினார்.

ஸங்கீத கலையின் தாய்வீடான தஞ்சாவூருக்கு ஒரு ஸமயம் வட நாட்டு வீணை வித்வான் தன் ஶிஷ்யகோடியுடன் வந்து அங்கு அனைவரையும் போட்டியிட்டு வென்று "ஜயபத்திரம்" எழுதித் தருமாறு மன்னரை வேண்டினார். மன்னர் திகைத்து, உடனே நம் ஸ்வாமிகளுக்கு ஒரு விண்ணப்பம் எழுதி அனுப்பினார். "ஸ்வாமி, என்னிடமும், இந்த ராஜ்யத்திலும் தாங்கள் மிகுந்த அக்கறையும், ஆதரவும் காட்டி ரக்ஷிக்கிறீர்கள். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இக்கட்டான நிலையிலிருந்து என்னைக் காப்பாற்ற வேணும்" என்று வேண்டி, "இதற்காக தாங்கள் உடனே தஞ்சைக்கு விஜயம் செய்ய வேண்டும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டு ஓலை எழுதி அனுப்பினார்.

கருணாமூர்த்தியான ஸ்வாமிகளும், மன்னனின் வேண்டுகோளின்படி தஞ்சைக்கு விஜயம் செய்தார். ஸ்வாமிகளை மிக மரியாதையுடன் வரவேற்று தங்குவதற்கான ஸகல ஏற்பாடுகளையும் விமர்சையாக மன்னர் செய்தார். ஸ்வாமிகள், மறுநாள் மத்தியானம் போட்டி வைத்துக் கொள்ளலாம் என்று அனும்தி கொடுத்தார். அன்று மாலை, ஆஸ்தான வித்வான்களை அழைத்து விபரங்கள் கேட்டறிந்தார். தனித்தனியே எல்லா வித்வான்களுக்கும் ரஹஸ்யமாக உபதேசித்து மறுநாள் மாலை ஸபைக்கு வரும்படி பணித்து விடை கொடுத்து அனுப்பினார்.

அன்று ஸ்வாமிகள் ஸயனித்திருந்த ஸமயம், தனது ப்ரிய ஶிஷ்யரான திம்மண்ணனிடம், "திம்மண்ணா, என் மனம் ஏனோ அல்லாடுகிறது. உன் தந்தை கனகாசலபட்டரின் வீணையை எடுத்து வாசி" என்றார். திம்மண்ணன், ஸ்வாமிகள் முன் வாசிக்கத் தயங்கவே, "பரவாயில்லை வாசி, உன் வாசிப்பு எனக்குப் பிடிக்கிறது, வாசி" என ஸ்வாமிகள் ஊக்குவித்தார். திம்மண்ணனும் குருவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து வாசிக்க ஆரம்பித்தார்.

ஸ்வாமிகள் ரஸித்துவிட்டு பிறகு தாம் அதே வீணையில் வாசிக்க ஆரம்பித்தார். "மால்கோஷ்" என்ற ஹிந்துஸ்தானி ராகத்தை விஸ்தாரமாக வாசித்து, "திம்மண்ணா! உன்னிப்பாக என் வாசிப்பைக் கேட்டு மனதில் பதிய வைத்துக் கொள். இனி நான் வாசிக்கும் தேவலோக ஸங்கீதம் ஸரஸ்வதியின் செல்லப் பிள்ளையான நாரதரால் என் குரு வ்யாஸராஜருக்கு உபதேசம் செய்யப்பட்டதாகும். அதை உனக்கு நான் உபதேசிக்கிறேன். கவனமாகக் கேட்டு பதிய வைத்துக் கொள்" எனப் பணித்து வாசிக்க ஆரம்பித்தார். முடிந்ததும், "நாளை நடக்க இருக்கும் போட்டியில் நீதான் வாசிக்கப் போகிறாய்" என்றார். திம்மண்ணன் நடுங்கி "ஸ்வாமி என்னால் எப்படி தங்களைப்போல் வாசிக்கமுடியும்" என வினவினான். ஸ்வாமிகள் "திம்மண்ணா! நீ என்னைப் போலவே வாசிப்பாய். நான் உன் எதிரில் அமர்ந்து ரஸிப்பேன். ஸபையோர் அதைக் கேட்டு மெய்மறந்து போவர். எல்லாம் மூலராமன் அருளால் நடைபெறும்" என்று கூறி திம்மண்ணனை அனுப்பிவிட்டு யோகநித்திரையில் ஆழ்ந்தார்.

மறுநாள் ஸபை கூடியது. ஸ்வாமிகள் விசேஷமான பத்ராஸனத்தில் அமர, மன்னர்கள் சற்று தாழ்வான ஆசனங்களில் அமர, எதிரில் அரைச் சந்திரன் வடிவில் ஜோடிக்கப்பட்ட மேடையில் உத்ரதேசத்து வித்வான் தம் கோஷ்டியுடன் அஹம்பாவமாக வந்து அமர்ந்தார்.

ஸபையில் ஆஸ்தான வித்வான்கள், ரஸிகர்கள், அதிகாரிகள், ப்ரமுகர்கள் பொதுமக்கள் அனைவரும் மிக நெருக்கமாகக் கூடி இருந்தனர்.

அமைதியான ஸபையில் மன்னர் சிவப்பநாயக்கர் எழுந்து ''ஸபையோர்களே, இதுவரை தோல்வியறியாத உத்திரதேசத்து வீணைவித்வான் நம் ஸ்வாமிகளை போட்டியில் சந்திக்கப் போகிறார். இது நம் பாக்கியம்'' என்று கூறி அமர்ந்தார்.


வீணைவித்வான் திகைத்து எழுந்து நின்று, ஸ்வாமிகளையும் மன்னரையும் வணங்கி, ''இதென்ன புதுமை! ஸன்யாசியுடன் நான் போட்டியிடுவது அபசாரம். அதை நான் செய்யமாட்டேன். உமது ஆஸ்தான பண்டிதர்களை நான் வென்றுவிட்டேன். ஜய பத்திரிகை தாமதமின்றி எழுதித் தரவேண்டியதுதானே முறை?'' என்றார்.

ஸ்வாமிகள் சிரித்துவிட்டு, ''வித்வான் அவர்களே! உங்கள் விருப்பப்படியே நீர் என்னுடன் போட்டியிடவேண்டாம்'' என பேச ஆரம்பித்ததும், மன்னர் எழுந்து கைகூப்பி ஸ்வாமிகளுக்கு மட்டும் கேட்கும்வண்ணம் தீனமாக, ''மஹாஸ்வாமி, எனக்கு அபயம் அளிப்பதாக கூறி இப்படி கைவிட்டால் நான் என்ன செய்வேன்'' என வினவினார். ஸ்வாமிகள், ''மன்னா! உமக்கு அபயம் அளிப்பதாக வாக்களித்தது நிஜம்தான். பயப்படாதீர். சற்று பொறுமையாக அமருங்கள்'' என்றார். பிறகு வித்வானிடம், ''ஆஸ்தான பண்டிதர்களை வென்றபிறகு அல்லவா தங்களுக்கு ஜயபத்திரிகை தரவேண்டும்'' என்று வினவினார். வித்வான் உடனே, ''நான்தான் அவர்களை ஏற்கனவேயே வென்று விட்டேனே'' என்றதும் ஸ்வாமிகள், ''இல்லை, இன்னும் ஒரு வித்வான் உள்ளார்'' என்றார்.

மன்னர் உட்பட அனைவருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஸ்வாமிகள் உடனே, இருந்த இடம் தெரியாமல் அடக்கமாக அமர்ந்திருக்கும் தன் ஶிஷ்யனை நோக்கி, ''திம்மண்ணாசார்யரே, இந்த வித்வானுடன் போட்டிக்கு உம்மை அழைக்கிறேன்'' என்று கூறினார். திம்மண்ணன் எழுந்து ஸ்வாமிகளை நமஸ்கரித்து, வீணையை எடுத்துக்கொண்டு போட்டி மேடைக்கு வந்தான்.

ஸபையோருக்கு வியப்பு, வித்வான் நகைத்து, ''ஸ்வாமி என்ன பரிஹாஸம் செய்கிறீர்களா? இந்த பாலகனுடனா நான் போட்டியிடுவது''? என்று ஏளனமாகக் கேட்க, ஸ்வாமிகள், ''வயதுக்கும் வித்யைக்கும் என்ன ஸம்பந்தம்? பெரிய வைக்கோல் போரை கொளுத்தி ஸாம்பலாக்க, சிறு பொறி போதாதா என்ன?'' என்று கேட்டார்.

அப்படியானால் சரி என்று வித்வான், ''நான் முதலில் வாசிக்கிறேன். அதை அப்படியே இந்த பாலகன் வாசித்து காட்டட்டும்'' என்று கர்வமாகக் கூறி வாசிக்க ஆரம்பித்தார்.



முதலில் அவன் "மால்கோஷ்" ராக ஆலாபனை ஆரம்பித்ததும், திம்மண்ணன் ஸ்தம்பித்து ஸ்வாமிகளை நோக்கி, "தாங்கள் நேற்றிரவு உபதேசித்த அதே பாணிதான் இது" என கண்ணாலேயே தெரிவிக்க, ஸ்வாமிகளும் மூக்கில் மேல் விரல் வைத்து "பேசாமல் இரு. நம் ரஹஸ்யம் வெளியே தெரியவேண்டாம்" என சைகையால் சொல்லி புரிய வைத்தார்.

வித்வான் விஸ்தாரமாக ஆலாபனை முடித்து, வெற்றி நமதே என்று மமதையுடன் அலக்ஷியமாக திம்மண்ணனைப் பார்த்து, "எங்கே என்னைப் போல் வாசியுங்கள் பார்க்கலாம்" என்று கர்ஜனை செய்தார். திம்மண்ணன் கண்ணால் ஸ்வாமிகளை வணங்கி அடக்கமாக அமர்ந்து வித்வான் வாசித்ததை அப்படியே வாசித்ததும், ஸபையோர், பாலகன் ஈடு கொடுத்து வாசித்ததைக் கேட்டு கரகோஷம் செய்தனர். வித்வான் திகைத்துப்போய் உட்கார்ந்து விட்டார். உடனே ஸ்வாமிஜி வித்வானைப் பார்த்து "தங்கள் விருப்பப்படி நம் சீடர் வாசித்துவிட்டார். இனி என் விருப்பப்படி வேறு ஒரு ரீதியில் இந்த ராகத்தை அவர் வாசிப்பார்.. நீங்கள் அதை அப்படியே வாசித்துக் காட்டவேண்டும். முடியாதுபோனால் இதுவரையில் நீங்கள் வாங்கி வைத்திருக்கும் 'ஜய பத்திரங்களை' மன்னரிடம் கொடுத்துவிட்டு ஶரணாகதி செய்யவேண்டும். சரியா?" என்று சொல்லி திம்மண்ணனை வாசிக்கச் சொன்னார்.

திம்மண்ணன், ஸ்வாமிகள் தனக்கு விசேஷமாக உபதேசித்த முறையில் ஹிந்தோள ராகத்தை மந்த்ரம், மத்யமம், த்ருதம் என்ற வரிசையில் அபூர்வமாக வாசிக்க, உத்தரதேசத்து வித்வானுக்கு உதறல் ஏற்பட்டுவிட்டது. கானம் முடிந்ததும் அவர் வாசிக்க ஆரம்பித்தார். ஆரம்பத்திலேயே அபஸ்வரம் வர, வீணையை கீழே வைத்துவிட்டு தலை குனிந்தார்.

ஸ்வாமிகள் உடனே, "போகட்டும் வித்வான் அவர்களே! உங்களிடம் தோற்ற எங்களது ஆஸ்தான வித்வான்கள் இப்பொழுது உங்களிடம் போட்டியிடுவார்கள். பாருங்கள்" என்றதும் வித்வானுக்கு ஒன்றும் விளங்காமல் "இதென்ன தோற்ற வித்வான்கள் மறுபடி போட்டியிடுவதா? என்ன விசித்திரம்?" என்று, முதலில் அவர் தன் கோஷ்டியினரை வாசிக்கச் சொன்னார். அவர்கள் ஜலதரங்கள், ஷனாய், வீணை முதலிய வாத்யங்களில் திலக், பீம்ப்ளாஸ், பூபாளம், மோஹனம் என்ற ராகங்களில் தம் வித்வத்தைக் காட்டினார்கள். ஆஸ்தான வித்வான்கள், "என்ன ஆச்சரியம், நமக்கு ஸ்வாமிகள் நேற்று ரஹஸ்யமாக உபதேசம் செய்த அதே கிரமத்தில் வாசித்திருக்கிறார்களே" என மனதால்

நினைத்து, ஸ்வாமிகளுக்கு நமஸ்காரம் செய்து, அதே போல் வாசித்துக் காட்டி சுலபமாய் ஜயித்து விட்டார்கள்.

பிறகு திம்மண்ணனை நோக்கி ஸ்வாமிகள் அபயஹஸ்தம் காட்டியருளினார். திம்மண்ணனின் உடலில் மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது. முகத்தில் அபூர்வ தேஜஸ் உண்டாகி தெய்வீகக்களை திகழ்ந்தது. திம்மண்ணனின் விரல்கள் தாமாகவே வீணையை இசைத்ததும் தேவகானம் பெருகி ஸபையோர் நாத வெள்ளத்தில் தம்மை மறந்தனர். வயது முதிர்ந்த ஆஸ்தான வித்வான் ஒருவர் தம் பக்கத்திலிருந்த மற்றொரு வித்வானிடம் "இது இந்த உலகத்து இசையே அல்ல. தேவலோகத்து ஸங்கீதம். என் குரு என்னிடம் கூறியபடி பூலோகத்தில் ஸட்ஜம், மத்யமம் இந்த இரண்டு மூர்ச்சனைகள்தான் உண்டு. காந்தாரம், தேவர்களுக்குத்தான் உரியது. அந்த மூர்ச்சனையைதான் நாரதர் தேவலோகத்தில் வாசிக்கிறார். இந்த பாலகன் தெய்வாம்சம்தான். அதனால்தான் அந்த ஸங்கீதத்தை இசைக்கிறான்" என்றார்.

கரகோஷத்துக்குப் பிறகு ஸபையில் அமைதி நிலவியது. திம்மண்ணன் எழுந்து வினயமாக அனைவரையும் கைகூப்பி வணங்கி முந்தின நாள் இரவு ஸ்வாமிகள் தனக்கு உபதேசித்த விபரங்களைச் சொல்லி தனக்கு ஏற்பட்ட பெருமை அனைத்தும் ஸ்வாமிகளுக்கே சேரும் என்று கூறி அமர்ந்தான். அடுத்து ஆஸ்தான வித்வான்களும் ஒரு முகமாக முதல் நாள் மாலை ஸ்வாமிகள் தங்களுக்கு தனித்தனியாக உபதேசித்த விபரங்களைக் கூறி தோல்விக்குப் பின் தங்களது வெற்றிக்கு ஸ்வாமிகளே காரணம் எனக் கூறி அமர்ந்தனர். வடதேசத்து வித்வான் கோஷ்டியின் ஸாரங்கி வாத்ய வித்வான் ஒருவர் ஓடோடி வந்து ஸ்வாமிகளை வணங்கி, "தாங்கள் முன்னம் புகழ்பெற்ற வித்வான் தான்சேனின் சீடரை வெற்றி கொண்டீரல்லவா? அவரது சீடன் நான். அவர் உங்களை குருவாக மதிக்கிறார். எனவே தாங்கள் எனக்கு பரமகுருவாகிறீர். தங்களுடன் போட்டியிட வந்தது பெரிய அபசாரம். அறியாமல் நான் செய்த பிழை பொறுத்து அனுக்ரஹிக்கவேண்டும்" என ப்ரார்த்திக்க, ஸ்வாமிகளும் அப்படியே செய்தார். எல்லா வித்வான்களுக்கும் உசிதப்படி ராஜமரியாதைகளைச் செய்து கௌரவித்து அனுப்பினார். தஞ்சை மன்னர்கள் ஸ்வாமிகளுக்கு யானை மேல் அம்பாரி வைத்து, வெற்றி ஊர்வலம் நடத்தி தம் நன்றியை தெரிவித்துக்கொண்டனர்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீமத் ராமாயணத்தில் தர்மம் (தொடர்ச்சி)

- ஸ்ரீ ஸ்வாமிகள்

ஸ்ரீமத் ராமாயணத்தில், ஆரம்ப கட்டத்தில், சீதையை விவாகம் செய்வதற்கு முன்பே, அகல்யையின் சாப விமோசன சரித்திரம் வருகின்றது. அகல்யை, தன்னுடைய கணவரான கௌதம மஹரிஷியின் சொரூபத்தில் வந்த தேவேந்த்ரனிடம், தன்னுடைய கற்பை பறிகொடுத்த பூர்வ சரித்திரம் சொல்லப்படுகிறது. இந்திரன் என்பதை அகல்யை தெரிந்துகொண்டாளா, இல்லையா என்பதை நாம் இப்பொழுது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டாம். ஆனால், இச்சம்பவத்தால், கோபம் அடைந்த கௌதம மஹரிஷியோ, அகல்யையை 'கல்லாகப் போ' என்று சபித்து விட்டார். விஶ்வாமித்திரரின் யஜ்ஞஸம்ரக்ஷணம் முடிந்து வருகையில் ராமருடைய சரணத்தூளிபட்டு, அகல்யை சாபவிமோசனம் அடைகின்றாள். எந்த ஸம்பவத்தால் அகல்யையிடம் கோபம் அடைந்து அவளுடன் சேர்ந்து வாழப் பிடிக்காமல் அவளைக் கல்லாகப் போ என்று சாபம் கொடுத்தாரோ, அந்த கௌதம மஹரிஷியே இப்பொழுது ஸ்ரீராமபிரானால் சாப விமோசனமடைந்த அகல்யையைக் கண்டு ஸந்தோஷம் அடைந்து, தன்னை அகல்யையின் கணவர் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு ஸ்ரீராமபிரானை ஸேவிக்கின்றார். ஸ்ரீராமபிரானும், ரிஷி தம்பதிகளான அவர்களை பூஜ்யதா புத்தியுடன் ஸேவிக்கின்றார்.

இச்சம்பவத்தின் மூலம் ராமாயணத்தின் ஆரம்பத்திலேயே என்ன காட்டப்படுகிறது என்றால், ஒரு பெண் தன் வசப்பட்டோ, தன் வசமிழந்தோ கற்பை இழந்திருந்தாலும்கூட அவளைப் பவித்ரமாக்க ராமருடைய சரணத்தூளியே போதும். அப்படி இருக்க, மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் பவித்ரமாக வாழ்ந்த பிராட்டிக்கு அக்னிப்ரவேசம் செய்ய வேண்டிய அவசியம் என்ன?. தன் நாட்டிலுள்ள யாரோ ஒரு ப்ரஜை கூறியதற்காக அவளை வால்மீகி ஆஶ்ரமத்தில் கொண்டு விடவேண்டிய அவசியம் என்ன?.

ராமர், தர்மத்திற்காக தன்னையே வருத்திக் கொள்வதையும், மிகப் பெரிய த்யாகங்கள் பல செய்வதையும், ராமாயணத்தில் பல இடங்களில் பார்க்கின்றோம். குணங்களின் ஒரு எல்லை என்றால் அது ஸ்ரீராமரே. அப்படிப்பட்ட கல்யாண குணங்கள் உடையவராக இருக்கிறார். அவருடைய தர்மபத்னியான சீதை தானும் எல்லாவிதத்திலும் அவருக்கு நிகராக வாழ ஆசைப்படுகின்றாள். அதுதானே தர்மம்? அதுதானே அழகு?.

இதை இன்னும் தெளிவாக விளக்கவேண்டுமென்றால், ஒருவர் வேததர்மத்தை பரிபாலிப்பதற்காக, ''ஒவ்வொருவரும் தங்களுடைய குழந்தைகளை வேதம் படிக்கவைக்கவேண்டும்'' என்று மனமார ஆசைப்படுகின்றார். இதையே பலருக்கு எடுத்துச் சொல்லியும் வருகின்றார். அப்படி இருக்கையில், அவருடைய குழந்தையை வேதம் படிக்கவைக்க ஆசைப்பட்டும், அவன் கேட்காமல் வேறு படிப்பிற்குச் சென்றால், அது எப்படி அவருக்கு ஒரு குறையாக அமையுமோ அதுபோலவே தர்மத்தையே மூச்சாகக்கொண்டு வாழும் ராமருக்கு, அவருக்கு எல்லாவிதத்திலும் தகுதியான தர்மபத்தினி அமைவது அவசியம் ஆகும். அதுவே தகும். ஆகவே, சீதாபிராட்டியும் எல்லாவிதத்திலும் தான் ராமருக்கு தகுந்தவளாக இருக்க விரும்புகின்றாள்.

நல்ல குலத்தில் பிறந்த ஒருவன், தான் பிறந்த குலத்தின் பெருமையை உத்தேசித்து அதற்குத் தகுந்தாற்போல வாழ ஆசை கொள்கிறான். ஒரு நல்ல புத்திரன், தான் இழிவான செயல்களில் ஈடுபட்டால், அதனால் நம்முடைய பெற்றோர்களுக்கு அல்லவா இதனால் தலைகுனிவு ஏற்படும் என்று எண்ணித் தவறு செய்ய அஞ்சுகின்றான். அதுபோல், மாற்றான் கொண்டு சென்ற தன்னை ராமர் அப்படியே ஏற்றுக்கொண்டால் அவருடைய தர்ம ரக்ஷணத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிடுமோ என்று கவலைப்பட்ட சீதை, அக்னிப்ரவேசத்தை விரும்பி ஸந்தோஷத்துடன்தான் ஏற்றுக்கொண்டாள். சீதை ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தாலும், அதை ராமர் அனுமதிக்கவேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்வி எழலாம். சீதை அத்தகைய த்யாகத்தை, பரீக்ஷையை விரும்புவாள் என்பதை தெரிந்தே, ராமர் அக்னிப்ரவேசத்திற்கு ஏற்பாடு செய்தார்.

இது என்னவிதத்தில் நியாயம் என்றால், ஒருவன் பகவானைப் பார்க்க விரும்பி கடும் தவத்தை மேற்கொள்கின்றான். அவனைப் பார்த்து எல்லோரும் ஆஶ்சர்யத்தோடு வணங்குகின்றோமே தவிர, அதைத் தவறு என்று சொல்வதும் இல்லை. தடுப்பதும் இல்லை. ஏன் என்றால் கடும் தவம் இல்லாமல் எதுவும் கிடைப்பதும் இல்லை. அதுபோல், போருக்கு செல்லும் ஒரு வீரனை, பெற்ற தாயாரும், கட்டிய மனைவியும் வாழ்த்தி ஸந்தோஷத்துடன் அனுப்பி வைக்கின்றனர். ஆபத்துக்கள் நிறைந்தது போர்க்களம் என்பதை அவர்கள் அறியமாட்டார்களா என்ன?. அந்த வீரனும், அவனைப் பெற்றெடுத்தவளும், அவனுடைய மனைவியும், அத்தகைய த்யாக புத்தியும், தேசப்பற்றும் உடையவர்களாக இருப்பதே இதற்கு காரணம். அது போல், உயர்ந்த பதவியிலிருப்பவர்கள் அப்பழுக்கு

அற்றவர்களாக இருந்தால்தான் அவர்கள் கீழுள்ள நிர்வாகத்தில் தவறுகள் நடக்கும்பொழுது, தைர்யத்துடன் தட்டிக் கேட்கமுடியும். தானே சரியில்லாதபொழுது, தன் கீழுள்ளவர்களை சரியாக இருக்கும்படி சொன்னால், யார்தான் கேட்பார்கள்?

தன்னுடைய ப்ரஜைகளை தர்மத்தில் நிலைநிறுத்த வேண்டியது ஒரு அரசனின் தலையாய கடமையாகும். அரசனோ, அரச குடும்பத்திலுள்ளவர்களோ, தர்மம் வழுவி நடந்தால் ப்ரஜைகளை எப்படி தர்மத்தில் நிலைநிறுத்த முடியும்?. அதர்மமும், அஸத்யமும், சுயநலமும், கோழைத்தனமும், அதோடு குதர்க்கவாதமும் நிறைந்துள்ள இன்றைய சமூகத்திற்கு இவ்விஷயங்கள் புரியாததில் ஒன்றும் ஆச்சர்யம் இல்லை.

அக்னிப்ரவேசமும், நிறைமாத கர்ப்பிணியுமான சீதையை வால்மீகி ஆஶ்ரமத்தில் கொண்டுவிட்டதும், தர்மரக்ஷணத்திற்காக இருவரும் விரும்பி செய்த செயல்களே எனில், ஒருவரின் பிரிவால் மற்றவர் வருந்தவேண்டிய அவசியம் என்ன? என்று சிலர் கேள்வி கேட்கலாம். அப்படி கேள்வி கேட்பவர்கள் அரஸிகர்கள். தன்னுடைய பெண் குழந்தைக்கு விவாகம் முடித்து கணவருடன் அனுப்பிவைக்கும்பொழுது தாய், தந்தையர்கள் பிரிவாற்றாமையால் துயரப்படுவதில்லையா?. அவர்களே விவாகத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டு ஏன் அழவேண்டும் என்று கேட்பது எப்படி அநாகரிகமோ, அதுபோல்தான் இதுவும்.

அதுபோலவே, தஶரதர் தன் மனைவியான கைகேயிக்கு வசப்பட்டுவிட்டான் என்றும் சிலர் கூறுகின்றனர். ஸ்திரீக்கு வசப்பட்டு, தான் பெற்ற பிள்ளையை வனவாஸத்திற்கு அனுப்பிவிட்டான் என்றும் பலர் கூறுகின்றனர். தான் யுத்தகளத்தில் கைகேயிக்கு இரண்டு வரங்கள் தருவதாக ஸத்தியம் செய்துகொடுத்தார் தஶரதர். அந்த ஸத்தியத்தை நிறைவேற்றும் பொருட்டுதான் ராமரை வனத்திற்கு அனுப்பினார். ஆகவே, தஶரதர் ஸத்தியத்திற்கு வசப்பட்டாரே அன்றி ஸ்திரீக்கு வசப்படவில்லை. இதுபோன்று அநேக தர்ம சூக்ஷ்மங்கள் ராமாயணத்தில் ஆங்காங்கே புதைந்து கிடக்கின்றன. ■

---

ஆழ்ந்து கற்றறியாதவர்கள் ஆசிரியர்களாவதாலும், நீதியில்லாதவர்கள் நாட்டை ஆள்வதாலும், ஞானமில்லாதவர்கள் குருவாக ஆவதாலும் அனர்த்தங்களே விளையும்.

**-ஸ்ரீ ஸ்வாமிகள்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 14

ஸ்ரீ ஸ்வாமிகள்

## ஸேநாயி

பண்டரிபுரத்திற்கு ஸமீபத்தில், ஸேநாயி என்ற ஒரு விட்டல பக்தர் வாழ்ந்து வந்தார். அவர் பண்டரீநாதனான பாண்டுரங்கனிடம் அனன்ய பக்தி உடையவர். நாவித ஜாதியைச் சேர்ந்த அவர், தன்னுடைய க்ருஹத்தில் ஒரு அழகான பாண்டுரங்க ருக்மிணீ தம்பதிகளை ப்ரதிஷ்டை செய்து நித்யகீர்த்தனம் செய்துவந்தார். ஸாதுக்களுடன் கூடி அடிக்கடி அகண்ட நாமகீர்த்தனம் செய்துவருவார்.

அந்த காலகட்டத்தில், மராட்டிய ப்ரதேசத்தை ஆட்சி செய்து வந்த மொகலாய மன்னருக்கு சிகை அலங்காரம் செய்துவிட ஒருவர் தேவைப்பட்டார். ராஜாவுக்கு சிகை அலங்காரம் செய்துவிடும் பதவிக்கு வருவதற்கு பலர் நான், நீ என்று போட்டி போட்டார்கள். காரணம் யாது எனின், அந்த பதவி கிடைத்துவிட்டால், ராஜா அவர்களுக்கு என்று ஒரு தனி வீடு கொடுத்துவிடுவார். குடும்ப நிர்வாகத்திற்கு வேண்டிய வசதிகளுக்கான மான்யமும் கொடுத்துவிடுவார். மேலும் மஹாராஜாவுக்கு ஸேவைசெய்யும் ஒருவர் வேறு யாருக்கும் ஸேவை செய்யக்கூடாது என்பதினால் அவர்களுக்கு மற்ற வேலை பளுவும் கிடையாது. தினமும் காலையில் சிறிது நேரம் ராஜஸபைக்கு சென்றுவந்தால் போதும். ஆகவேதான் இந்த பதவியை அடைய நாவித ஜாதியைச் சேர்ந்த பலர் போட்டியிட்டார்கள்.

ஆனால், யாருடைய சிபாரிசும் இல்லாமல், எந்த முயற்சியும் செய்யாதபோதிலும், பாண்டுரங்கனுடைய க்ருபையால் எப்படியோ ஸேநாயிக்கு அந்தப் பதவி கிடைத்தது. பரம ஸாது அவர். பாண்டுரங்கனைத் தவிர வேறு எதுவும் தெரியாது அவருக்கு. இந்த உத்தியோகம் கிடைத்ததில் பரம ஸந்தோஷம் அவருக்கு. ராஜாவுடைய தயவைப் பெற்றுவிட்டோமே என்பதோ, பெரிய வீடு, மானியங்கள் எல்லாம் கிடைத்துள்ளதோ என்பதெல்லாம், ஸந்தோஷத்திற்கான காரணம் இல்லை. சிறிது நேரம் ராஜஸபைக்கு சென்று வேலைசெய்த நேரம் தவிர மற்ற காலங்களில் வேறு யாருக்கும் ஸேவை செய்யக்கூடாது என்பதால் எப்போதும்விட அதிகமாக நாமஸங்கீர்த்தனம் செய்யலாமே, ஸாதுக்களுடன் நேரத்தை கழிக்கலாமே, பாண்டுரங்கனுக்கு ஸேவை செய்யலாமே என்பதுதான் ஸந்தோஷத்திற்கான காரணம்.

அந்த ஊரில் உள்ள மற்ற நாவிதர்களுக்கு, ஸாதுவான இவரைக் கண்டு அசூயை. எப்படியாவது ஸேநாயிக்கு கிடைத்த அந்த பதவியை பறித்துவிட்டு, அதில் தான் தொற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைத்தார்கள். அதற்கான தகுந்த ஸமயத்தையும் எதிர்பார்த்துவந்தார்கள். அதற்கு தகுந்தாற்போலவே அப்படியொரு ஸமயமும் வந்தது. ராஜவேலைக்காக கிளம்பிய ஸேநாயி வழியில் ஒரு மிகப்பெரிய பாகவதகோஷ்டி நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டு பண்டரீபுரம் செல்வதைக்கண்டு தன்னை மறந்து அதில் தானும் கலந்துகொண்டு ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும், அவர்களுடன் செல்வதை மற்றவர்கள் கண்டார்கள்.

இதுதான் தகுந்த ஸமயம் என்று எண்ணி அவர்களில் ஒருவன் தைரியமாக மஹாராஜாவிடம் சென்று, "மஹாராஜா இன்று ஸேநாயி வரமாட்டான்" என்றான். ராஜாவும், யாது காரணம், என்று வினவ, வந்தவனோ, இந்துக்களுக்கு பண்டரீநாதன் என்று ஒரு தெய்வம் உள்ளது. அவரைக் காண ஸாதுக்கள் கோஷ்டியுடன் பஜனை செய்துகொண்டு சென்றனர். அவர்களுடன் சேர்ந்து இவனும் சென்றுவிட்டான். நான் அவனிடம் "ராஜ வேலைக்கு போகவேண்டாமா? நாழியாகிவிட்டதே" என்று கூறினேன். அவனோ, எனக்கு எதைப்பற்றியும் கவலை இல்லை. எனக்கு ராஜாவும் முக்கியமில்லை, ராஜவேலையும் முக்கியமில்லை, பண்டரீநாதன்தான் முக்கியம். நீ வேண்டுமானால் மஹாராஜாவிடம் சென்று சொல்லிக் கொள், எனக்கு கவலை இல்லை என்று சொன்னான்" என்றான்.

இதைக் கேட்டதும் மஹாராஜாவிற்கு மஹத்தான கோபம் ஏற்பட்டது. "ஸேநாயியை கைதுசெய்து வரவும்" என்று கட்டளை பிறப்பித்துவிட்டு ஸ்நானத்திற்குச் சென்றுவிட்டார். ஸ்நானம் செய்யும்கட்டத்தில் ராஜஸேவைக்காக ஸேநாயி கைக்கட்டிக்கொண்டு நிற்பதைக்கண்டு ஆச்சர்யப்பட்டார் ராஜா. ஒரு ஸமயம், நமக்கு தவறான தகவல் வந்திருக்குமோ என்று நினைத்தார். ஸேநாயி முன்பாக சிகை அலங்காரத்திற்காக அமர்ந்துகொண்ட அவருக்கு, ஸேநாயி தன்னைத் தொடும்பொழுதும், பார்க்கும்பொழுதும் இனம்புரியாத ஆனந்தம் ஏற்படுவதைக் கண்டு அதிசயித்தார். மேலும் அன்று செய்த சிகை அலங்காரம் வழக்கத்தைவிட மிகவும் அழகாக இருந்தது.

இதையெல்லாம் கண்டு அதிசயித்த மஹாராஜா, ஸேநாயி, உன் சிகை அலங்காரம் இன்று மிகவும் விசித்திரமாயும், அதிசயமாகவும் உள்ளது, என்று கூறியவுடன், அக்கணமே மஹாராஜாவிற்கு, பகவான் பாண்டுரங்கன் ஆயிரம் கோடி மன்மத லாவண்யனாக காட்சி கொடுத்தார்.



சுருள் சுருளான கேசங்கள், அதில் அழகான ஒரு சாயக் கொண்டை. அதில் நேர்த்தியாக தொடுக்கப்பட்ட மயில் பீலி, காதுகளில் அழகான மணி குண்டலங்கள், அகன்ற நெற்றி, அதில் வாஸனையுடன் கூடிய கஸ்தூரி திலகம், மிகவும் மிருதுவான நாசி, பளிங்கு போன்ற கண்கள், பார்ப்பவரை மயக்கும் தாமரை ஒத்த சிவந்த உதடுகள், வைஜயந்தி மாலை, பீதாம்பரம், இடுப்பில் அழகாக வைத்துக்கொண்டுள்ள கரங்களில் கங்கணம், கால்களில் நூபுரம், இப்படியாக தரிசனம் கொடுத்தான்.

தர்சனத்தைக் கண்டு மயங்கிய மஹாராஜா, அடுத்த க்ஷணம் அங்கு ஸேநாயியைக் கண்டார். மீண்டும் தனக்கு அதுபோல் தரிசனம் தரும்படி நிர்பந்தப்படுத்தினார், அழுதார், கதறினார், துடித்தார், மிரட்டியாவது தரிசனத்தை பெற்றுவிடுவது என்று அவரைப் பிடித்து சிறையில் அடைத்தார். ஸேநாயி ரூபத்தில் வந்தவர் பகவான் ஆனதால் சிறையிலிருந்து மறைந்து விட்டார். உண்மையான ஸேநாயியை கைது செய்து மஹாராஜா முன்பு நிறுத்தினார்கள் ராஜஸேவகர்கள். ராஜாவின் நிலையையும், தன் பொருட்டு தன் ரூபத்தில் பகவானே வந்து ராஜஸேவை செய்ததையும் நினைத்து கதறி அழுதார் ஸேநாயி, துடித்தார். ஸர்வத்தையும் துறந்து, பண்டரிபுரம் சென்று, அனன்யமாக விட்டலனையே பாடிக் கொண்டிருந்து, பண்டரிநாதனின் சரணத்தை அடைந்தார்.

ஸேநாயி இவ்வளவு பக்திசெய்தும் பகவான் அவருக்கு தரிசனம் தந்தாரா என்பது தெரியவில்லை. மொகலாய மஹாராஜா, அதுவும் பகவத் தரிசனத்திற்கே ஆசைப்படாத அவருக்கு, பகவான் தரிசனம் தரவேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்வி எல்லோருக்கும் வரலாம். மஹாராஜா, தன்னுடைய அனன்ய பக்தனான ஸேநாயிக்கு ஒரு க்ருஹம் கொடுத்து, மான்யம் கொடுத்து. அவனை ஸௌக்கியமாக கீர்த்தனம் செய்யவைத்ததே அதற்கு காரணமாகும்.

குழந்தைகளே! இதிலிருந்து, தன்னைக் கொண்டாடுபவர்களைக் காட்டிலும், தன் அடியார்களைக் கொண்டாடுபவரிடத்தே பகவான் அதிக ப்ரீதி அடைகின்றான் என்பது தெரிகிறதல்லவா!

---

*ஜாதியின் பெயரால் மக்களைப் பிரிப்பது தவறு என்றால் மொழியின் பெயராலோ, தேசத்தின் பெயராலோ மக்களைப் பிரித்து, உயர்வு தாழ்வு சொல்வதும் தவறே.*

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 41

*கோபமில் குணத்தோய் குறியாய் எனைக்கொளக்*
*குறையென் செய்தேன் அருணாசலா* (தொடர்ச்சி)

மாதாவிடம் மட்டுமே ஒருவனுக்கு காமம், கோபம், பயம் மூன்றும் இருக்காது. மூன்றும் இல்லாமல் இருந்தால்தான் சுலபமாக நெருங்க முடியும். ஆகவேதான், நாமரூபங்கள் இல்லாத ப்ரஹ்ம ஸ்வரூபத்தை ஒரு மாதாவின் வடிவத்தில் வழிபடுகிறது ஶாக்த மதம். அந்த தேவிக்கே, ஸ்ரீ மாதா, ப்ரஹ்ம வித்யா, ஸ்ரீவித்யா என்ற பல பெயர்கள் உண்டு.

சிவனுக்கு பரதத்வம் சொல்லும் ஒரு மதத்திற்கு சைவம் என்று பெயர். அவர்களைப் பொறுத்தவரை மோக்ஷம் என்பது கைலாசத்தை அடைவதே. தேவிக்கு பரதத்வம் சொல்லும் ஶாக்த மதத்தை சார்ந்தவருக்கு மோக்ஷம் என்பது தேவி வாஸம் செய்யும் ஸ்ரீ புரத்தை அடைவதேயாகும்.

ஸ்ரீவித்யா என்ற மதம், சிவன், சக்தி இரண்டையும் சேர்த்து வழிபடுவதாகும். ஒரு ஸமயம், காஞ்சீபுரத்தில் காமாக்ஷியிடம் பக்தி கொண்ட ஒரு "மூகன்" இருந்தார். அம்பாளின் அனுக்ரஹத்தால் ஞானம் ஏற்பட்டு காமாக்ஷிமேல் ***மூக பஞ்ச ஸ்துதி*** என்று ஒரு ஸ்தோத்ர க்ரந்தத்தை அருளியுள்ளார். அதில் ஒருவருக்கு அம்பாளின் அனுக்ரஹம் உண்மையிலேயே ஏற்பட்டிருக்குமானால் அதற்கு என்ன அடையாளம் என்பதை அழகாக எடுத்துரைக்கின்றார்.

அம்பாளின் அருளை அடைந்தவர்களுக்கு காடும் அரண்மனையும் ஒன்றாகிவிடும். அதாவது, நாம் காட்டில் வஸித்தால் துஷ்ட ம்ருகங்கள் இருக்கின்றனவே, நம்முடைய ஶரீரத்திற்கு ஆபத்தாகிவிடுமே என்ற பயம் அவர்களுக்குப் போய்விடும். ஏனென்றால், "நான் ஶரீரம் இல்லை. அழியாத ஆத்மஸ்வரூபமே நான்" என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டுவிடும். ஶரீரத்தை ரக்ஷிக்கவேண்டும் என்பதுபற்றியும், நாளையபற்றிய எண்ணமும் அவர்களுக்கு இருக்காது. அரண்மனையில் வாஸம் செய்தாலும், அதைவிட்டு விலகவேண்டும் என்ற எண்ணமும் அவர்களுக்கு இருக்காது. ஏனென்றால், அரண்மனையும், காடும் அவர்களது த்ருஷ்டியில் ஒன்றே. பரமஶத்ருவிடம் கூட அவர்களுக்கு பரமப்ரேமை ஏற்படும். ஒவ்வொருவரையும் ஶரீரமாகப்

பார்க்கும்பொழுதுதான் பிடித்தவர், பிடிக்காதவர் என்ற ராக த்வேஷங்கள் ஏற்படுகின்றன. அவர்களுடைய ஸரீரத்தைத் தள்ளி அவர்களை ஆத்மஸ்வரூபமாகப் பார்க்கும்பொழுது வேண்டியவர், வேண்டாதவர் என்ற இடத்திற்கு இடமில்லை.

காமஸாஸ்திரத்தில் முத்தத்திலிருந்துதான் காமசிந்தனைகள் தூண்டப்படுவதாக சொல்லப்படுகின்றது. அதற்கு ஆதாரமாக இருக்கும் ஸ்த்ரீயின் அதரமும், ஒரு மண்ஓடும் அம்பாள் பக்தனுக்கு ஒன்றாகிவிடும். அதாவது, அம்பாளின் அருளை வாஸ்தவத்தில் அடைந்தவர்களுக்கு காமம், கோபம், பயம் என்ற மூன்று விகாரங்களும் இருக்காது. ஒரு வஸ்துவின் மீது ஏற்படும் ஆசைக்கு காமம் என்று பெயர். அந்த ஆசை நிறைவேறாதபொழுதுதான் கோபம் ஏற்படுகின்றது. நம்மைக் காட்டிலும் சக்தி அதிகமானவர்களிடம் பயமும், நம்மைக் காட்டிலும் சக்தி குறைந்தவர்களிடம் கோபமும் ஏற்படுகின்றது. இவையெல்லாம் மனதின் விஹாரங்களே.

அம்பாளின் அனுக்ரஹம் என்று மட்டுமில்லை. எந்த ஒரு தெய்வத்தின் அனுக்ரஹம் அடைந்தவர்களுக்கும் இந்த விகாரங்கள் இருப்பதில்லை.

(தொடரும்)

தொகுப்பு : **முரளீதரதாஸன்**

# செய்திகள்

### டிசம்பர் 2-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் தீபோத்ஸவம் நடைபெற்றது.

### டிசம்பர் 12-ந் தேதி

நமது நாமஸங்கீர்த்தன குழுவினரால், கோவிந்தபுரம், பகவந்நாம போதேந்த்ராள் அதிஷ்டானத்தில் நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது. பாகவதஸ்ரீ ஸௌந்தரராஜ பாகவதர் முன்னின்று நடத்தி வைத்தார்.

### டிசம்பர் 15-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில், ஸ்ரீ மஹாபெரியவாளின் ஆராதனையை ஒட்டி 'க்ருத்திகா மண்டல' வேத பாராயணம் நடைபெற்றது.

அன்று, திருவிடைமருதூரில் வேதபாடசாலையில் அத்யாபகராக இருப்பவரும், ஸ்ரீ மஹாபெரியவாளால் *"குலபதி"* என்று கௌரவிக்கப்பட்டவருமான ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கனபாடிகள், வித்யாதானத்தை ப்ரதானமாகக்கொண்டு பல வேத வித்வான்களை உருவாக்கிய ஸேவையைப் பாராட்டி அவரை கௌரவித்து ***"வேத அத்யாபக ரத்னம்"*** என்ற விருது அளிக்கப்பட்டது.

### டிசம்பர் 16-ந் தேதி முதல்

சென்னை ப்ரேமிகபவனத்தில் தனுர்மாத பூஜை, தினமும் காலையில் 5 மணிக்கு நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

### டிசம்பர் 16-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் தினமும் மாலை 6 மணிக்கு அத்யயன உத்ஸவம் நடைபெற்றது.

### டிசம்பர் 20-ந் தேதி

திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி கோவிலில் காலை 4.30 மணிக்கு நகரஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

## நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### ஜனவரி 6-ந் தேதி முதல் 16-ந் தேதி வரை

மும்பை மாதுங்கா, South Indian Bhajan Samaj-ல் ஸ்ரீ ஸ்வாமிகள் உபன்யாசம் நிகழ்த்துகிறார்கள்.

### ஜனவரி 29, 30, 31-ந் தேதிகள்

மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருத கல்லூரியில், ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண ஸதஸ் நடைபெறும்.

### பிப்ரவரி 3-ந் தேதி முதல் 8-ந் தேதி வரை

சென்னை மேற்கு மாம்பலம், அயோத்யா மண்டபத்தில் நடைபெறும் மஹாஶிவராத்ரி வைபவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொள்கிறார்கள்.

**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/99/
WPP No. TN/MS(S)/54/99

| வேணு : 4 | ஜனவரி 1999 | கானம் : 6 |
|---|---|---|





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar